இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 17-11-2025

# பீகார் வெற்றியின் பின்னணி!

பீகார் மாநிலத்தில் நிதிஷ்குமார் - பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இது அதிர்ச்சி அளிக்கவில்லை. இந்த வெற்றிக்கு பிரதமர் மோடி அடுக்கும் காரணங்கள் தான் அதிர்ச்சிக்குரியதாக இருக்கின்றன.

**“பீகார் தேர்தல் வெற்றி என்பது சிறந்த நிர்வாகம், வளர்ச்சி, மக்கள் நலன், சமூகநீதியின் வெற்றியாகும்” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. பீகார் என்னவகையில் வளர்ந்துள்ளது என்பதை அவர் அடுக்கி இருந்தால் பாராட்டலாம். பீகாரில் சிறந்த நிர்வாகம் எப்படி அமைந்துள்ளது என்பதைச் சொன்னால் மகிழ்ச்சி அடையலாம். பீகாரில் சமூகநீதி தழைத்தோங்கிய காட்சிகளை விவரித்தால் போற்றலாம். இவை எதுவும் பீகார் வெற்றிக்கு காரணம் அல்ல.**

பீகாரில் லாலு பிரசாத் கட்சியுடன் நிதிஷ்குமார் கூட்டணி அமைத்திருந்த போது மோடி பேசாத பேச்சா? ‘ மக்களை நம்புவதை விட நிதிஷ் மந்திரவாதிகளைத் தான் நம்புகிறார்’ என்று குற்றம் சாட்டினார் பிரதமர் மோடி. ‘பீகாரை மினி சம்பல் பள்ளத்தாக்கு ஆக ஆக்க முயற்சிக்கிறார் நிதிஷ்’ என்று குற்றம் சாட்டினார் பிரதமர் மோடி. ‘துப்பாக்கி கலாச்சாரம் நடக்கும் ஆட்சி’ என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நிதிஷ் ஆட்சியைத் தான் பிரதமர் மோடி சொன்னார். எனவே மக்களாட்சி நடப்பதற்காக பீகார் மக்கள் நிதிஷ்குமாருக்கு வாக்களிக்கவில்லை. வாக்களித்திருக்கவும் மாட்டார்கள்.

இந்திய அளவிலான பத்திரிக்கைகள் முதல் தமிழ் நாளிதழ்கள் வரை அனைத்தும் சொல்வது, முதலமைச்சர் நிதிஷ்குமார் அரசு, தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்னால் வழங்கிய பத்தாயிரம் ரூபாய் தான் அனைத்துக்கும் காரணம்.

**பீகாரில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது 6.10.2025 அன்று. அதற்கு பத்து நாட்களுக்கு முன் 26.9.2025 அன்று பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 1 கோடியே 25 லட்சம் பெண்களுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் அவர்களது வங்கிக் கணக்கில் சேர்க்கப்பட்டது. அதற்காக மட்டும் 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. பீகாரில் சராசரியாக ஏழைகள் குடும்பத்தில் சராசரி மாத வருமானம் 3 ஆயிரத்தில் இருந்து 4 ஆயிரம் ரூபாய் ஆகும். இப்படி இருக்கும் சூழலில் அவர்களது வங்கிக் கணக்கில் 10 ஆயிரம் ரூபாய் போட்டால் என்ன ஆகும்? அதுதான் அவர்களை நிதிஷ் - பா.ஜ.க. கூட்டணிக்கு கண்ணை மூடிக் கொண்டு வாக்களிக்க வைத்துள்ளது.**

‘தினத்தந்தி’ நாளிதழ் சென்னையில் வசிக்கும் பீகார் மக்களின் கருத்துகளை வாங்கி வெளியிட்டுள்ளது. ‘தேஜஸ்வீ வெற்றிபெற்றால் ரூ.2,500 தருவதாகச் சொன்னார். ஆனால் நிதிஷ்குமார் ரூ.10 ஆயிரத்தை வங்கிக் கணக்கில் செலுத்திவிட்டார்’ என்று சொல்லி இருக்கிறார் ராஜேஷ். ‘பெண்களுக்கு ரூ.10 ஆயிரம் வழங்கியதுதான் வெற்றிக்கு காரணம்’ என்கிறார் பீதார்ஸ். ‘பெண்கள் அதிகளவில் வந்து வாக்களிக்கவே ரூ.10 ஆயிரம் கொடுத்தது தான் காரணம்’ என்கிறார் சச்சின் குமார். இதுதான் காரணமே தவிர, பிரதமர் சொல்லும் வளர்ச்சியுமல்ல, எந்த வெங்காயமுமல்ல.

வளர்ச்சிக் குறியீடுகள் அனைத்திலும் பீகார் மிக மோசமாக இருப்பதை பிரதமர் மோடி அரசு வெளியிட்ட புள்ளி விபரங்களே காட்டுகிறது. வேறு ஆதாரங்கள் தேவையில்லை.

**பா.ஜ.க. என்றாலே ஜாதி அரசியல்தான். இதனை ‘சோசியல் இன்ஜினியரிங்’ என்று ஸ்டைலாகச் சொல்லிக் கொள்வார்கள். அனைத்து ஜாதி மக்களுக்கும் சம வாய்ப்புகளை வழங்கி அனைத்து வகையிலும் ஒரே மாதிரியாக வளர்த்தெடுப்பதுதான் சமூகநீதி. அனைத்து ஜாதி மக்களையும் தங்களது கூட்ட ணிக்குள் கொண்டு வந்து அவர்களது வாக்குகளை அறுவடை செய்வதுதான் பா.ஜ.க.வின் ஜாதி அரசியல் ஆகும். அதனைத் தான் பீகாரிலும் செய்தார்கள்.**

இதோ ‘தினமலர்’ முதல் பக்கத்தில், பா.ஜ.க. கூட்டணி சாதித்தது எப்படி என்பதற்கான முதலாவது காரணமாகச் சொல்கிறது.

★ சட்டசபைத் தேர்தலுக்கு முன்பே, அனைத்துத் தொகுதிகளிலும் பா.ஜ.க. சார்பில் ஜாதி மதிப்பீடு நடத்தப்பட்டது. கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதி ஒதுக்கப்பட்டாலும் தேர்வு செய்யப்படும் வேட்பாளர் குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்பதில் பா.ஜ.க. மிகுந்த கவனத்துடன் இருந்தது. இதன் அடிப்படையில் தான் வேட்பாளர் தேர்வும் இருந்தது.

★ கடந்த 2020 தேர்தலில் மகத், ஷாபாத் பகுதிகளில் ராஜ்புத், குஷ்வாகா சமூகங்களிடையே பிரிவினை ஏற்பட்டதால், அப்பகுதியில் உள்ள 24 தொகுதிகளில் இரண்டில் மட்டுமே பா.ஜ.க. கூட்டணி வென்றது. இந்த தேர்தலில் ராஜ்புத், குஷ்வாகா ஓட்டுகளை ஒருங்கிணைக்க பவன்சிங், உபேந்திர குஷ்வாகா போன்ற தலைவர்களை பா.ஜ.க. பயன்படுத்தியது.

★ கடந்த தேர்தலில் சிராக் பஸ்வானால் ஐக்கிய ஜனதா தளத்துக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதை உணர்ந்த பா.ஜ.க. மேலிடம், சிராக்கின் அனைத்து கோரிக்கைகளுக்கும் சம்மதம் தெரிவித்தது.

என்று பட்டியலிடுகிறது ‘தினமலர்’. ஜாதிகளின் கூட்டணியை உருவாக்கியது பா.ஜ.க. நிதிஷ் அணி. அதுதான் வெற்றிக்கு மிக அடிப்படையாக அமைந்தது.

இவை அனைத்துக்கும் மேலாக தேர்தல் ஆணையத்தை தனது கூட்டணியின் தொங்குசதையாக மாற்றியது பா.ஜ.க..

**சிறப்புச் சீர்திருத்தம் என்கிற பெயரால், வாக்காளர் பட்டியலையே சிதைத்தது தேர்தல் ஆணையம். லட்சக்கணக்கானவர்கள் வாக்குகள் பறிக்கப்பட்டது. வாக்குரிமை இல்லாமல் ஆக்கப்பட்டது. பல லட்சம் பேர் புதிதாக சேர்க்கப்பட்டார்கள். பறிக்கப்பட்டவர்களில் அதிகமாக இசுலாமிய மக்கள் இருந்தார்கள். தேஜஸ்வீ, காங்கிரஸ் வாக்காளர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டார்கள். இது குறித்த எந்தக் கேள்விக்கும் தேர்தல் ஆணையம் பதில் சொல்லவில்லை.**

தேர்தலில் பல்வேறு கோளாறுகளையும் செய்தது ஆணையம். வாக்காளர் பட்டியலில் 7 கோடியே 42 லட்சம் வாக்காளர்கள் இறுதி பட்டியலில் உள்ளதாக தெரிவித்த தேர்தல் ஆணையம், தேர்தலுக்கு பிறகு 7 கோடியே 45 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர் என்று தெரிவித்துள்ளது. இறுதி வாக்காளர் பட்டியலை விட 3 லட்சம் வாக்காளர்கள் எண்ணிக்கை எப்படி உயர்ந்தது?

**66.91 விழுக்காடு மக்கள் வாக்களித்தனர் என்று தெரிவித்த தேர்தல் ஆணையம் எத்தனை வாக்காளர்கள் வாக்களித்தனர் என்பதை வெளிப்படையாக தெரிவிக்கவில்லை. எனவேதான் பீகார் வெற்றிக்கு மோடியோ, நிதிஷ்குமாரோ சொந்தம் கொண்டாடுவதை விட தேர்தல் ஆணையம் தான் சொந்தம் கொண்டாட முழுத் தகுதி உள்ளது.**

பீகார் மக்களால் தேஜஸ்வீ காங்கிரஸ் கூட்டணி நிராகரிக்கப்பட வில்லை. பீகார் சட்டமன்ற தேர்தலில், அரசியல் கட்சிகள் பெற்ற ஒட்டுமொத்த வாக்குகள் விகிதத்தில் ராஷ்டிரிய ஜனதாதளம் கட்சி 23 விழுக்காடு வாக்குகளை பெற்று முதலிடம் பிடித்துள்ளது. பா.ஜ.க. 20 விழுக்காடு வாக்குகளையும், ஐக்கிய ஜனதாதளம் கட்சி 19 விழுக்காடு வாக்குகளையும் பெற்றுள்ளன.

**‘இந்தியா’ கூட்டணி மக்களின் செல்வாக்கை பெறவில்லை என்றால் ராகுலும், தேஜஸ்வீயும் செல்லும் இடமெல்லாம் லட்சக்கணக்கான மக்கள் கூடி இருக்க மாட்டார்கள். செல்லும் இடமெல்லாம் மக்கள் வெள்ளத்தில்தான் இவர்கள் நீந்தினார்கள். அதை மீறி நிதிஷ் - பா.ஜ.க. வெல்வதற்கு மக்களின் எண்ணத்தை மீறிய காரணங்கள் அமைந்து இருந்திருக்கின்றன.**

இதனைத்தான் சி.பி.ஐ. எம்.எல். லிபரேஷன் கட்சியின் பொதுச்செயலாளர் திபங்கர் பட்டாச்சார்யா சொல்லி இருக்கிறார்: “இந்த தேர்தல் முடிவுகள் முற்றிலும் இயற்கைக்கு மாறானவை. இது பீகாரின் நடைமுறை உண்மையுடன் ஒத்துப் போகவில்லை”.

இந்த உண்மைகளை பீகார் மக்கள் உணராமல் இருக்கலாம். இது எதனால் கிடைத்த வெற்றி என்பது பிரதமர் மோடியின் உள்ளத்துக்கு தெரியும். தனிமையில் சிந்திக்கும் போது மகிழ்ச்சி தரும் வெற்றியாக இது அவருக்கு இருக்க முடியாது.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் ”தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.11.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் ”தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவில் அமைக்கப்பட்டுள்ள முற்போக்கு புத்தகக் காட்சியைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, சென்னை மாநகர நூலக ஆணையக் குழு உறுப்பினர் கவிஞர் மனுஷ்ய புத்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### இதுவரை காப்பீடு செய்யாத விவசாயிகள் மட்டும் காப்பீடு செய்யலாம்!

# சம்பா நெற்பயிர்க் காப்பீட்டிற்கான காலவரம்பு நவ.30 வரை நீட்டிப்பு!

## அமைச்சர்.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, நவ. 17 -

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது, விவசாயிகள் சம்பா நெற்பயிரை முழு வீச்சில் சாகுபடி செய்து வருகின்றனர். இதுவரை 26.25 இலட்சம் ஏக்கர் பரப்பில் சம்பா நெற்பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நாள் வரை, 6.27 இலட்சம் விவசாயிகளால் 15 இலட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது மொத்த சாகுபடி பரப்பில் 57 சதவீதமாகும். இதே நாளில் கடந்த வருடம் 10 இலட்சம் ஏக்கர் சம்பா நெற்பயிர் காப்பீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், மதுரை, புதுக்கோட்டை, கரூர், சேலம், திருப்பூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தேனி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, அரியலூர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தருமபுரி, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், சிவகங்கை, கடலூர், திருவள்ளூர் மற்றும் ஈரோடு ஆகிய27 மாவட்டங்களில் சம்பா நெற்பயிரை காப்பீடு செய்வதற்கான கடைசி தேதி 2025 நவம்பர் 15ஆம் தேதி என அறிவிக்கை செய்யப்பட்டது.



எனினும் பல மாவட்டங்களில் தொடர் மழையின் காரணமாக குறுவை நெல் அறுவடை மற்றும் சம்பா நெல் நடவு பணிகள் தாமதமானதாலும், வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்த பணிகளில் கிராம நிர்வாக அலுவலர்கள் ஈடுபட்டுள்ளதால் அடங்கல் வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதாலும், சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் காப்பீட்டுக்கான கடைசி தேதியை நீட்டிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கைக்கிணங்க, விடுபட்ட அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்கிணங்க சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர்க் காப்பீட்டுக்கான கடைசி தேதியை 2025 நவம்பர் 30ஆம் தேதி வரை நீட்டித்து ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் துரித நடவடிக்கையின் பேரில் சம்பா/ தாளடி/ பிசானம் நெற்பயிர் செய்யும் விவசாயிகளின் நன்மையை கருதி பயிர் காப்பீடு செய்யும் காலக்கெடு வானது நவம்பர் 30 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனவே வேளாண்மைத் துறை அலுவலர்கள் தத்தம் பகுதிகளில் உள்ள விவசாயிகளை அணுகி பயிர் காப்பீடு செய்திடும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கரூர், மதுரை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சி, திரு ப்பத்தூர், திருப்பூர், திரு வள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில், இதுவரை சம்பா நெற்பயிரை காப்பீடு செய்யாத விவசாயிகள் உரிய ஆவணங்களுடன் பொது சேவை மையங்கள், தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நவம்பர் 30ம் தேதிக்குள் பதிவு செய்து பயனடையுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

### பா.ஜ.க. நிர்வாகி ராதா தலைமையில் – சின்னாளபட்டி மேட்டுப்பட்டியை சேர்ந்த

# பா.ஜ.க. - அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் இ.பெரியசாமி முன்னிலையில்!

திண்டுக்கல், நவ. 17 -

மாற்றுக் கட்சியிலிருந்து கழகத்தினல் இணைந்தவர்களை கழகம் கைவிடாது என்று ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்கள் பேசியதோடு கழகத்தில் இணைந்த மேட்டுப்பட்டி பகுதி சேர்ந்த 50 பாஜகவினர் மற்றும் கலிக்கம்பட்டி நெசவாளர் காலனி சேர்ந்த 10 அதிமுகவினற்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்னாளபட்டி மேட்டுப்பட்டியை சேர்ந்த பாஜக ஐடி விங் செயலாளர் கோபால கிருஷ்ணன் பொருளாளர் சூர்யா, ஐ .டி .விங்ஆன்மீக மண்டல செயலாளர் பாரதிராஜா, கிளைத்தலைவர்கள் ராஜன், புனிதா, நிர்மலா, சரவணன் உட்பட 50 பாஜகவினர் மற்றும் கலிக்கம்பட்டி நெசவாளர் காலனி சேர்ந்த அதிமுகவினர் 10 பேர் உட்பட 60 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகிபாஜக முன்னாள் மண்டல செயலாளரும் செயற்குழு உறுப்பினருமான ஜி ராதா தலைமையில் அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்கள் முன்னிலையில் தங்களை திமுகவில் இணைத்து கொண்டனர் திமுகவில் இணைந்தவர்களுக்கு கட்சியின் சின்னம் பொறித்த ஆடை அணிவித்து வாழ்த்து தெரிவித்த அமைச்சர் பெரியசாமி அவர்கள்நான் முதன்முதலாக 1989 ஆம் வருடம்ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டபோது எனக்கு ஆதரவு அளித்த கிராமங்களில் சின்னாளபட்டியும் ஒன்று இன்று வரைஅவர்கள் கொடுத்து வரும் ஆதரவை என்னால் மறக்க முடியாது கடந்த 30 ஆண்டுகளாக மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் பலர் திமுகவில் இணைந்துள்ளனர். அவர்கள் திமுகவில் உயர் பதவியில் உள்ளனர் மேலும் அவர்கள் உள்ளாட்சி பதவியிலும் உள்ளனர்.

அதுபோல இன்று தங்களை தாய்க்கழகமான திமுகவில் இணைத்து கொண்ட அனைவரையும் ஒருபோதும் திமுக கைவிடாது அவர்களுக்கு நான் என்றும் உறுதுணையாக இருப்பேன் மேலும் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் அவர்களை அரவணைத்து கட்சி பணியாற்ற வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்

திமுகவில் இணைந்து கொண்டவர்கள் தங்களுடைய மாற்றுக் கட்சியை சேர்ந்த அடையாள அட்டையை அமைச்சர் பெரியசாமியிடம் வழங்கி வாழ்த்து பெற்றனர் நிகழ்ச்சியின் போது தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன் கிழக்கு மாவட்ட பொருளாளர் சத்யமூர்த்தி ஆத்தூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார் நத்தம் முருகேசன், நிர்வாகி அம்பை ரவி, பேரூர் கழக பொறுப்பாளர் பால கிருஷ்ணன், பேரூராட்சி மன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், , அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்த கோபால், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, சுமதி கணேசன் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



இராணிப் பேட்டையில் நடந்த அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 778 பயனாளிகளுக்கு ரூ.6.89 கோடி மதிப்பீட்டில் கடன் உதவிகளை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜே.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல். ஈஸ்வரப்பன், நகராட்சி தலைவர் சுஜாதா வினோத், திமிரிஒன்றிய குழு தலைவர் அசோக், நகராட்சி தலைவர்கள் ஆற்காடு தேவி, சோளிங்கர் தமிழ் செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.